மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை

அசல் வழக்கு எண். 616/2019

**2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18–ம் நாள் திங்கள் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பசுருதீன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | :சக்கரபாஷா சாயபு | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :அன்னமங்கலம் | வயது | : 73/2025 |

**முதல் விசாரணை :**

(i) நான் இவ்வழக்கில் இரண்டாதம் பிரதிவாதியாவேன். 1ம் பிரதிவாதி என்னுடை சகோதரர் ஆவரெ். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எனக்காவும், 1ம் பிரதிவாதிக்கும் சேர்த்து எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.03.06.2025ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரையும் தவறாக சேர்த்து எங்களது இடத்திற்கு வழங்கபட்ட கணினி பட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 03.06.2025ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள பகுதிக்குண்டான தற்போதைய கணினி பட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.